Registered as a Newspaper in Ceylon

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

மலர் ௭ பாழுடயானை குரோதி கார்த்திகை 22 ஆம் நாள் ஷஃபான் பிறை 2 7-12-64) திங்கட்கிழமை இதழ் 298




# புதிய மந்திரி சபையா, பார்லிமெண்ட் கலைப்பா?

## 12 கட்சிகள் தேர்தலில் போட்டியிடவிருக்கின்றன

யாழ்ப்பாணம், திங்கள்

அடுத்த பொதுத் தேர்தலில் குறைந்தது 12 அரசியல் கட்சிகள் போட்டியிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் திரு. எஸ். ஜே. வி செல்வநாயகம் தலைமையிலுள்ள தமிழரசுக்கட்சியும், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையிலுள்ள தமிழ்க்காங்கிரஸ் கட்சியும், திரு. சி. சுந்தரலிங்கம் தலைமையிலுள்ள ஈழமுன்னணியும் போட்டியிடுமெனத் தெரிய வருகிறது.

கிழக்கு மாகாணத்திலுள்ள சில தொகுதிகளில், யு. என். பி.யும், சுதந்திரக்கட்சியும் போட்டியிடுமென்றும், வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சில தொகுதிகளில் டாக்டர் என் எம். பெரேரா தலைமையிலுள்ள சமசமாஜக்கட்சியும், திரு எட்மண்ட சமரக்கொடி தலைமையிலுள்ள சமசமாஜக் கட்சி (புரட்சிக் குழுவினர்) போட்டியிடுவார்களென்றும் தெரிய வருகிறது. கிழக்கு மகாணத்தில் சில தொகுதிகளில் திரு சி. பி. டி. சில்வா தலைமையிலுள்ள புதிய கட்சியும் போட்டியிடுமெனவும் தெரியவருகிறது. கிளிநொச்சி எம். பி. திரு. ஏ. சிவசுந்தரத்தின் தலைமையிலுள்ள சுதந்திர தமிழர் கட்சியும், வட மாகாணத்தில் சில தொகுதிகளில் போட்டியிடுமென அறியப்படுகிறது.

இலங்கையிலுள்ள மற்ற மாகாணங்களில் கீழ்க்காணும் ஒன்பது கட்சிகள் போட்டியிடுமென அறியப்படுகிறது.

திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையிலுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி, திரு. சி பி டி' சில்வா தலைமையிலுள்ள புதிய கட்சி, திரு. டட்லி சேனநாயக்கா தலைமையிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சி, டாக்டர் என். எம் பெரேரா தலைமையிலுள்ள சமசமாஜக்கட்சி, திரு எட்மண்ட சமரகொடி தலைமையிலுள்ள சமசமாஜக்கட்சி (புரட்சி குழுவி

(6-ம் பக்கம் பார்க்க)

## மார்ச் மாதத்தில் பொதுத் தேர்தல்?

கொழும்பு, ஞாயிறு

அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் தேர்தல் நடைபெறலாமென கைத்தொழில் மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா அநுராதபுரத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு.சி.பி.டி. சில்வா அரசாங்கத்திலிருந்து விலகியது சம்பந்தமாக நாடு பூராவும் அரசாங்கம் விளக்கம் தெரிவிக்குமென்றும் அவர் கூறினர்.

கேகாலையில் ஒரு கூட்டத்தில் பேசிய கல்விமந்திரி திரு பி. பி ஜி கலுகல்லே இம்மாதக் கடைசி வாரத்தில் பார்லிமெண்ட் கலைக்கப்படலாம் எனத் தெரிவித்தார்.

# அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கும் கருத்து

## எதிர்க்கட்சிகளின் அடுத்த நடவடிக்கை இன்று தெரியும்

கொழும்பு, ஞாயிறு

சிறிமா பண்டாரநாயக்காவின் அரசாங்கம் தோல்வியடைந்ததால், பார்லிமெண்ட் கலைக்கப்படுமா அல்லது புதிய மந்திரிசபையொன்று அமைக்கப்பட்டு, புதிய அரசாங்கம் நிறுவப்படுமா என்று சில அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன. பார்லிமெண்டைக் கலைக்க கவர்னருக்குச் சிபார்சு செய்வேன் என்று பிரதமர் கூறியிருப்பதற்கு அரசியல் வட்டாரங்கள் பலவித அபிப்பிராயங்கள் தெரிவித்திருக்கின்றன.

"சிபார்சுசெய்வேன்" என்று பிரதமர் கூறியிருப்பதன்மூலம், பார்லிமெண்டைக் கலைப்பது பற்றி அவர் திட்டவட்டமான முடிவு எதுவும் கொண்டிருக்கவில்லையென்பது தெளிவாகப் புரிகிறதென்றும் பார்லிமெண்டைக் கலைக்காது வேறு புதிய வழிகளைக்கையான பிரதமர் ஆலோசனை நடத்துகிறாரா என்றும் அதே வட்டாரங்கள் கேட்கின்றன

### அரசியல் சட்டம் இடம்கொடுக்கிறது

தோல்வியடைந்த பிரதமர் மற்றுமொரு அரசாங்கத்தை அமைப்பதற்கு அரசியலில் சட்டரீதியாக இடமுண்டு எனவும் அப்படிச்செய்யும்பட்சத்தில் அரசாங்கத்தின்மீது நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணையொன்றைக் கொண்டுவர சபையின் அங்கீகாரம்பெற வேண்டுமென்றும் அதே வட்டாரங்கள் கருதுகின்றன.

### எதிர்க்கட்சிகள் கோரலாம்

சிறிமா அரசாங்கம் தோல்வியடைந்து தினங்கள் மூன்றாகியும், பார்லிமெண்ட் கலைக்கப்படாததுகுறித்து கவர்னர் ஜெனரலிடம் எதிர்க் கட்சிகள் காரணம் கேட்குமெனத்தெரிய வருகிறது.

### அடுத்த நடவடிக்கை?

எதிர்க்கட்சிகளின் கூட்டமொன்று நாளை இங்கு நடைபெறவிருக்கின்றது. அரசாங்கம் தோல்வியடைந்தும் பார்லிமெண்ட் கலைக்கப்படாதது குறித்தும் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பது குறித்தும் நாளைக் கூட்டத்தில் முடிவுசெய்யப்படும்.

## அரசாங்கத்தின் தோல்வி பௌத்தத்தின் வீழ்ச்சியாகும்

### பிரதமருக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கடிதம்

கொழும்பு, ஞாயிறு

சிறிமா அரசாங்கத்துக்கு ஏற்பட்ட தோல்வி பௌத்த மதத்துக்கு ஏற்பட்ட வீழ்ச்சியாகும் என்று வித்தியாலங்கார பல்கலைக்கழக உபவேந்தர் வண கிரிவத்துவ பிரக்ஞாசார நாயகதேரோ பிரதமமந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

"குறிப்பாக பௌத்த மதத்துக்கும் சிங்கள மொழி கலாசாரத்துக்கும் சிறிமா அரசாங்கம் பெரும் சேவையாற்றியுள்ளது. எதிர்பாராத சந்தர்ப்பத்தில் எதிர்பாராதமாதிரி இந்த அரசாங்கத்துக்கு ஏற்பட்ட வீழ்ச்சியினல் நாட்டுப்பற்றுமிகுந்த சிங்களமக்கள் மிகுந்தகவலைகொண்டுள்ளனர்.

பார்லிமெண்ட் கலைக்கப்படும் என்று பிரதமர் விடுத்த செய்தி இந்த நாட்டுமக்களை உண்மை

(6 ம் பக்கம் பார்க்க)

## பிலிப், ராஜரத்னவின் கூட்டத்தில் குழப்பம்

### பொலிஸார் தடியடிப்பிரயோகம்

கொழும்பு, ஞாயிறு

திரு. பிலிப் குணவர்த்தன திரு. கே. எம். பி. ராஜரத்தின ஆகியோர் பங்குபற்றிய கூட்டத்தில் இன்று குழப்பம் ஏற்பட்டு இறுதியில் பொலிஸார் தடியடிப்பிரயோகம் செய்யவேண்டிய நிலையேற்பட்டது.

கோட்டே தொகுதியில் மேற்படி கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே இவ்வித குழப்பம் ஏற்பட்டது

கூட்டம் ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கையில் கூட்டத்தை நோக்கி போத்தல்கள் கற்கள் ஆகியன வீசப்பட்டன இதைத்தொடர்ந்தே கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. கலகம் விளைவித்தவர்களுக்கும் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டு நிலைமை முற்றியதைத் தொடர்ந்து பொலிஸார் ஸ்தலத்துக்கு விரைந்து தடியடிப்பிரயோகம் செய்தனர்.

கூட்டத்தில் பேசிய திரு.

(6-ம் பக்கம் பார்க்க)

## என். எம். ஆலோசனை

லண்டன், டிச. 6

சுகயீனம் காரணமாக இங்கு சிகிச்சை பெற்றுவரும் இலங்கை நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா இலங்கை அரசாங்கம் ஒரு வாக்கினல் தோல்வி அடைந்தது குறித்து இங்குள்ள சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தி வருகிறார் எனத் தெரிய வருகிறது.

இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய அடுத்த நடவடிக்கை குறித்தே அவர் ஆலோசனை நடத்தி வருகிறார் என நம்பப்படுகிறது.

இம்மாதம் 12-ம் திகதி ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறும் டாக்டர் என். எம். பெரேரா அநேகமாக இம்மாதம் 17-ம் திகதிக்கு முன் இலங்கை போவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வினோபாஜிக்கு போப் தங்கப்பதக்கம்

வர்தா, டிச 6

டாக்டர் ராதாகிருஷ்ணன் இன்று ஆச்சார்ய வினோபாபாவேயைச் சந்தித்து அவரது உடல்நலம்பற்றி விசாரித்தார். மகாராஷ்டிர கவர்னர் டாக்டர் சேரியன், மகாராஷ்டிர முதன் மந்திரி திரு நாய்க் ஆகியோரும் அவருடன் சென்றனர். முதன் மந்திரி திரு. நாய்க் போப்பாண்டவரின் தங்கப் பதக்கமொன்றை வினோபாஜியிடம் அளித்தார். வினோபாவுக்கு இந்தப் பதக்கத்தை வழங்கும்படி போப்பாண்டவர், பிரதமர் சாஸ்திரியிடம் கொடுத்திருந்தார்.

## இன்று நடைபெறும் பகிரங்க கூட்டம்

கொழும்பு, ஞாயிறு

புதிய நகரசபை மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை மாலை ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பொதுக் கூட்டம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி நடைபெறுமென்று தெரிய வருகிறது.

தற்பொழுதுள்ள அரசியல் நிலைமையினல் அக்கூட்டம் ஒத்திபோடப்பட வில்லையென்றும், பேச்சாளர் எல்லோரும் கலந்துகொள்வார்களென்றும் தெரியவருகிறது.

### மணிவாக்கு

அஹிம்சை பரிபூரணத் தன்மை அடையும்போது அங்கு விரோத பாவனைக்கே இடமில்லை. அங்கு அன்பும் அச்சமின்மையுமே முன்னிற்கிறது.

—வினோபாஜி


ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு கார்த்திகை மீ 22 உ. (7-12-64)


## திரு. ஸி. பி டி. சில்வா கூறும் சமாதானம்

தமது அரசாங்கம் தோற்றதற்குக் காரணம், திரு. ஸி. பி. டி. சில்வாதான் என்றும் அவர் தங்கள் முதுகில் குத்தி துரோகம் செய்துவிட்டதாகவும் பிரதமர் ஸ்ரீமா வானொலி மூலம் விடுத்துள்ள அறிக்கையில குற்றம் சுமத்தியுள்ளார். இது பாரதூரமான குற்றச்சாட்டு.

இதற்கு திரு. சில்வா அளித்துள்ள பதிலில் கூட்டு அரசாங்கம் சர்வாதிகாரப் போக்கைப் பின்பற்றியதாயும், "எங்களுடைய மக்கள் தொடர்ந்து சுதந்திர மக்களாக வாழ்வதற்கு என்னாலானதைச் செய்யும் பொருட்டே மந்திரி பதவியும், சபை முதல்வர் பதவியையும் தியாகம் செய்கிறேன்" என்று சமாதானம் கூறி சுதந்திர மக்கள் மத்தியில் சுதந்திரமாகத் தாம் தொடர்ந்து வாழப் போவதாகவும் தெரிவித்தார்.

கூட்டரசாங்கம் பதவியேற்று ஆறுமாதங்களாகி விட்டன. இந்த அரசாங்கம் பதவியேற்றபொழுதே 'சர்வாதிகாரம் வந்து விடும்' என்று பலரும் எச்சரித்தனர். பத்திரிகை மசோதாக்கள் கொண்டு வருவதென அரசாங்கம் தீர்மானித்தபோதும், பத்திரிகை மசோதாவைப் பார்லிமென்டில் சமர்ப்பிப்பதெனத் தீர்மானிக்கப்பட்ட போதும், பத்திரிகை மசோதா சுதந்திரத்துக்கு ஆபத்தானதென பத்திரிகைகளும் பொது மக்களும் கருத்துத் தெரிவித்தபோதும் திரு. சில்வா மந்திரிசபையில் அங்கம் வகித்து மந்திரி சபைக் கூட்டங்களில் கலந்து மந்திரிசபைத் தீர்மானங்களுக்கெல்லாம் உடந்தையாக இருந்திருக்கிறார். பெளத்தத்துக்கு சட்ட பூர்வமாக முக்கிய இடம் அளிப்பதென்ற அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு முதலில் ஆதரவாக இருந்த அவர் இப்பொழுது அது "ஏமாற்று" என்கிறார்.

கூட்டரசாங்கம் ஏற்பட்ட சமயத்திலோ, பத்திரிகை மசோதா கொண்டுவரப்பட்ட நேரத்திலோ இந்த 'தியாகத்தை' அவர் செய்திருக்கலாம். இரு பதவிகளையும் இப்பொழுது மக்களுக்காக தியாகம் செய்தவர் தமது பார்லிமென்ட் ஸ்தானத்தையும் தியாகம் செய்திருந்தால் அவர் மீது இன்று பிரதமர் உள்ளிட்டு யாரும் எவ்வித குற்றமும் சுமத்த முடியாது.

# தமிழர் ஒத்துழைப்பின்றேல் எந்த அரசாங்கமும் நடவாது

## இலங்கை அரசியல் நெருக்கடி கற்பிக்கும் முக்கிய பாடம்

### மொழிப் பிரச்னைக்கு தேசிய முறையில் தீர்வு காணவேண்டும்

(நமது அரசியல் நிருபர்)

தமிழ்ப் பேசும் மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இல்லாவிட்டால இலங்கையில் எந்த அரசாங்கமும் நிலைத்திருக்க முடியாதென்பது சென்ற வாரத்தில் நடந்துள்ள அரசியல் நிகழ்ச்சிகள் மீண்டும் கற்பிக்கும் முக்கியமான அரசியல் பாடமாகும்.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது வாக்கெடுக்கும் சமயம் நெருங்கி வந்துவிட்டது. அரசாங்கக்கட்சியின் நிலைமை வரவர மிக ஆபத்தாகியது. சி. பி. டி' சில்வாவும் மற்றும் 13 பேரும் தங்கள் கட்சியிலிருந்து விலகிச் செல்வரென்பதை அறிந்ததும், தமது அரசாங்கத்தின் உயிரைக் காத்துக்கொள்ள மலையகத்து நியமன மெம்பரான தொண்டமானையும் தமிழரசுக் கட்சியையும் பிரதமர் உதவிக்காக அணுகினராம்,

முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்துக்கும் இதே நிலைமை ஏற்பட்டிருந்தது. தமிழரசுக் கட்சித் தலைவரின் ஆதரவை யூ. என். பி தலைவர்கள் நாடியதுபோது, தமிழரின் உரிமைகளைப் பாதுகாக்க சில குறைந்தபட்ச நிபந்தனைகளைக் கேட்டனர். அதற்கு ஒப்ப யூ. என். பி மறுத்ததால், அந்த அரசாங்கத்தை ஆதரிக்க தமிழரசுக் கட்சி மறுத்துவிட்டது. அதனால் அந்த அரசாங்கம் வீழ்ச்சியடைந்தது.

அதே போல், இப்போது கூட்டு அரசாங்கத்தின் சார்பாக, தமிழரசுக் கட்சியின் ஆதரவை நாடியபோது, கட்சிக் காரியதரிசி மூன்று நிபந்தனைகளைக் கேட்டதாக நமது பார்லிமெண்ட் நிருபர் தெரிவிக்கின்றார். 1. நியாயமான அளவு தமிழ்மொழிச் சட்டத்தை உடன் அமுல் செய்வது 2. மாவட்ட சபை மசோதாவை நிறைவேற்றுவது. 3 அரசாங்க ஊழியரைப் பற்றிய மொழிக் கொள்கையை உடன் கைவிடுவது.

இந்த மூன்று அம்சங்களையும் அரசாங்கம் அமுல் நடத்தும் என்று பார்லிமெண்டிலே பகிரங்கமாக எழுந்து நின்று உத்தரவாதம் அளிக்கும் பட்சத்தில், இதுபற்றி கட்சி ஆலோசிக்குமென்று காரியதரிசி கூறியதாகத் தெரிகிறது. சிம்மாசனப் பிரசங்கத்தை ஆதரிக்காவிட்டாலும் தமிழரசுக்கட்சி வாக்களிக்காமல் நடுநிலைமை வகித்திருந்தால் கூட, அரசாங்கத்தின் உயிர் பிழைத்திருக்கும்.

பார்லிமெண்ட் கமிட்டி அறையிலே இருந்து மும்முரமாக ஆதரவு தேடிக்கொண்டிருந்த பிரதமர் சிறிமாவோவிடம், தமிழரசுக் கட்சியின் இந்த நிபந்தனை தெரிவிக்கப்பட்டதாயும் இதுபற்றி அவர் ஒரு முடிவுக்கு வருமுன்னரே வாக்கெடுப்பு நடைபெற்று அரசாங்கம் தோல்வி அடைந்ததாகவும் நமது நிருபர் தெரிவிக்கின்றார்.

'சாகிற காலத்தில் சங்கரா' என்று ஒரு வசனமுண்டு. இம்மூன்று நிபந்தனைகளும் புதிதல்ல சிங்களவருக்கும் தமிழருக்கும் திருப்தி அளிக்கும் முறையில் மொழிச் சட்டத்தை நிறைவேற்றுவதாக ஏற்கெனவே சிம்மாசனப் பிரசங்கத்தில் பிரதமர் கூறியிருந்தார். தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி, இவ்விஷயமாக உடன் நடவடிக்கை எடுத்திருப்பின், அரசாங்கத்துக்கு இந்த கதி நேர்ந்திராது. முக்கியமான இவ்விஷயத்தைத் தள்ளிவைத்து, பத்திரிகை மீது அவசரமாய் பாய்ந்தனர். கடைசிநேரத்திலும் இந்த குறைந்தபட்சக் கோரிக்கைகளுக்கு ஒப்பி இருப்பின், தமிழ்ப் பிரதிநிதிகள், நடுநிலைமையை வகித்திருக்கக் கூடும். தங்கள் உயிரைக் காத்துக் கொள்ளவும் கூட, இந்த உத்தரவாதங்களை பகிரங்கமாக அளிக்க பிரதமர் தயாரில்லையென்றே தெரிகிறது. அப்படிச் செய்தால் அடுத்த தேர்தலில் சிங்கள வாக்குகள் தங்களுக்குக் கிடைக்காமல் போகுமோ என்ற பீதி போலும்.

∴ ∵ ∴

நியமன மெம்பரான தொண்டமான் சாதாரணமாக அரசாங்கத்தை ஆதரிப்பவர். அவரது ஆதரவுகிடைத்திருப்பினும் அரசாங்கம் பிழைத்திருக்கும். ஆனால் மலைநாட்டுத் தமிழருக்குத் தனித் தொகுதி ஏற்படுத்துவதை அவர் பலமாக ஆட்சேபித்துள்ளார். என்றாலும் அவர் அரசாங்கத்தை எதிர்க்காமல், நடுநிலைமை வகித்ததே பெரிய காரியம்.

∵ ∵ ∵

தமிழ் பேசும் மக்களின் ஆதரவை, முன்னர் ஐ. தே. கட்சி அரசாங்கமோ, இப்போது கூட்டு அரசாங்கமோ பெறத் தவறிவிட்டது. தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் யாரும் இவ்விரு அரசாங்கங்களிலும் இடம்பெறவில்லை. முக்கிய காரணம் மொழிப் பிரச்னை தான். இந்தப் பிரச்னையை நியாயமான முறையில் தீர்க்க முன்வராதவரை தமிழ்ப்பேசும் மக்களின் ஆதரவு எந்த அரசாங்கத்துக்கும் இருக்க முடியாது.

வேறு எந்த விஷயத்தில் பட்டிக்கும் சிறிமாவுக்கும் கருத்துவேற்றுமை இருப்பினும் மொழிப் பிரச்னையில் இருப்பதாகத் தெரியவில்லை. இரு கட்சிகளும் சேர்ந்துதான் தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றின. ஆகவே மொழிப் பிரச்னை தீரவேண்டுமானால், இவ்விரு கட்சிகளும் இந்தியர் பிரச்னையை தேசியப் பிரச்னையாகக் கருதி ஒத்துழைத்ததுபோல் இதிலும் ஒத்துழைத்து, இதை நல்லபடியாகத் தீர்க்க உடன் முன்வர வேண்டும்.

இப்போதைய அரசியல் சூழ்நிலையில், இந்தஒத்துழைப்பு சாத்தியமில்லைதான். என்றாலும் மொழிப் பிரச்னையை வருகிற தேர்தலில் கட்சி விஷயமாகக் கருதாமல் தேசியப் பிரச்னையாகக் கருதி, தேர்தலுக்குபின் ஒரு வட்டமேசை மகாநாடு கூட்டித் தீர்ப்பதாக இவ்விரு கட்சிகளும் தேசிய நன்மை கருதி ஏன் அறிவிக்க முடியாது? இந்தியர் பிரச்னையில் இவ்விரு கட்சிகளும் ஒத்துழைத்திருக்கையில் ஏன் மொழிப் பிரச்னையில் தமிழருக்கு நியாயம் வழங்குவதில் ஒத்துழைக்கத் தயங்க வேண்டும்?

ஐக்கியதேசியக் கட்சியிலோ, சுதந்திரக்கட்சியிலோ மானமுள்ள தமிழர் அங்கம் வகிக்கத் தயங்குகின்றனர். காரணம் அவ்விரு கட்சிகளின் குறுகிய மொழிக் கொள்கைதான். தமிழரின் ஒத்துழைப்பை பெறாமல், இனி எந்தக்கட்சியும் அரசாங்கத்தைக்கொண்டு நடத்த முடியாதென்பது இப்போது தெளிவாகிவிட்டதால், மொழிப் பிரச்னையில் இனியும் பிடிவாதம் காட்டாமல், தமிழருக்கு நியாயம் வழங்க முன்வர வேண்டிய அவசரமும் அவசியமும் அதிகரித்துவிட்டது. இந்த நெருக்கடி, சுதந்தரக்கட்சிக்கு மட்டுமல்ல, எல்லா அரசியல் கட்சிகளுக்கும் கற்பிக்கும் முக்கியமான எச்சரிக்கையும் பாடமுமாகும்.

## பிரதமரின் வானொலி அறிக்கை

கொழும்பு, ஞாயிறு

பிரதம மந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா வானொலிமூலம் வெளியிட்ட செய்திபற்றி நேற்று ஜனப் பிரதிநிதிகள் சபை அறையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் கூடி ஆராய்ந்தனர்.

பாராளுமன்றத்தை கலைக்கும் விஷயத்தில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், நாளை திங்கட்கிழமை மாலை மீண்டும் எதிர்க்கட்சித் தலைவர்கள் கூடி, எடுக்க வேண்டிய பதில் நடவடிக்கைகள் பற்றி ஆராயப்படுமென அறியப்படுகிறது.

(5-ம் கலத் தொடர்ச்சி)

மறுத்தானை மலைகோத்தந் கெடுத்தான் தன்னை மணிமுடியோடிருபதுதோள் தெரியக் காலால், இறுத்தானை யெழு நரம்பினிசை கேட்டானை யெண்டிசைக்குங் கண்ணன் சிரமேலென்றை, அறுத்தானை அமரர்களுக் கமுதீந்தானை யாவர்க்குந் தாங்கொணா நஞ்சமுண்டு, பொறுத்தானை புண்ணியனை புனிதன் தன்னைப் பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

—அப்பர் சுவாமிகள்

## ஐயாறன் எழுதுவது

கொழும்பிலே பார்லிமெண்டுக்கு வெளியிலும், ஹைட் பார்க் கூட்டத்திலும் குழப்பமும் அடிதடிகளும் ஏற்பட்டுள்ளது கவலை அளிப்பதாகும். இந்நிலை மோசமாகி நாட்டில் முன்போல் கலவரம் ஏற்படுமோ என்றும், அஞ்சப்படுகின்றது.

எந்தக் காரணத்தால் கலவரம் ஏற்பட்டாலும்சரி முடிவில் அவதிப்படுபவர் தமிழர்தான். வருந்த இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி. இச்சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி காடையர்கள் வேட்டையாட எங்கே என்று காத்திருப்பர். ஆகவே நிலைமை மோசமாகாதபடி தடுக்க வேண்டிய கடமை பிரதமரை மட்டுமன்றி, எல்லா அரசியல் கட்சியினரையும் சேர்ந்ததாகும்.

* * *

திரு. ஸி. பி. டி. சில்வாவைப்பற்றித்தான் இப்போது ஊரெல்லாம் பேச்சு. அவருடைய கார் தாக்கப்பட்டபோது அவருக்கும் காயம் ஏற்பட்டதாயும் டட்லியே தம் காரில் அவரை ஏற்றிச் சென்றதாயும் பலபல வதந்திகள் அடிபடுகின்றன. சுதந்திர மக்களிடையே சுதந்திரமாக வாழ விரும்பியே, அவர் மந்திரிப் பதவியை தியாகம் செய்ததாகக் கூறினர். பாவம் நேற்று மந்திரிப்பதவி வகித்தவருக்கு இன்று எவ்வளவு சங்கடங்கள் இந்த அரசியல் வாழ்விலேயே நிம்மதி ஏது?

ஆனால் அவர் புதியதோர் அரசியல் கட்சியை ஆரம்பிக்கப் போவதாகவும், அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடப்போவதாயும் பத்திரிகைக்காரரிடம் தெரிவித்துள்ளார். கட்சியின் பெயரைப் பலருடனும் கலந்து தான் வெளியிடுவாராம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் இக்கட்சி போட்டியிடுமா என்பதுதெரியவில்லை. அரசியலில்தான் எவ்வளவு புதுப்புது வேடிக்கைகள்.

* * *

இன்றைய இலங்கை அரசியல் குழப்பத்திலே லண்டன் 'டைம்ஸ்' சில நம்பிக்கையான அறிகுறிகளைக் காணுகின்றது. ஆசியாவிலேயே இலங்கையில்தான் சுதந்திரத்துக்குப் பின் தேர்தல் நேர்மையாக நடந்து, உண்மையான புதிய அரசாங்கமும் அதிகாரத்துக்கு வந்துள்ளதென்றும், ஜனநாயகத்துக்கு இதுவே சரியான அறிகுறியென்றும் ஒரே கட்சி ஆட்சி நடத்தும் நாடுகளில் இதைக் காணமுடியாதென்றும் கூறுகிறது.

இங்கு நடக்கும் "ஜனநாயக"த்தில் சிறுபான்மையினரான தமிழர் பட்டுவரும் சுகங்கள் 'டைம்ஸ்'க்கு தெரியாது போலும், எப்படியும் 'வசிட்டர் வாக்காலே பிரம்மரிஷி' என்பதுபோல் இலங்கை அரசியல் குழப்பத்தில் ஜனநாயக வித்துக்களை லண்டனிலிருப்பவர்கள் கண்டுபிடித்துள்ளது பூரண உண்மையாக வேண்டும்.

* * *

இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் காக்கப்பட்டதை சென்னை "இந்து" வரவேற்றுள்ளதெனினும், மீண்டும் இங்கு புத்தபிக்குகளின் அரசியல் ஆட்டம் தலைதூக்கிவிட்டதோ என்று கவலை தெரிவித்துள்ளது. இது எப்படியாயினும் இலங்கையில் நடக்கும் ருசிகரமான அரசியல் நாடகத்தை உலகில் பலரும் கூர்ந்து கவனித்து வருவது குறிப்பிடத்தக்கது.

(4-ம்கலம் பார்க்க)

# தலைவர்களின் சந்திப்புகள் அடிக்கடி நிகழ வேண்டும்

## உலக நலனுக்கு இது நன்மைஅளிக்குமென்கிறர் சாஸ்திரி

### இந்தியப் பிரதமர் தாயகம் திரும்பினர்

லண்டன், டிச. 6

உலக சமாதானத்துக்கும் உலகை எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளைக் குறைப்பதற்கும் தலைவர்களிடையே அடிக்கடி கருத்துப் பரிவர்த்தனை நடைபெறுவது முக்கியமாகும் என்று இந்தியப் பிரதமர் திரு லால்பகதூர்சாஸ்திரி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

லண்டனில் மூன்று நாட்கள் தங்கியிருந்த திரு சாஸ்திரி, இந்திய-பிரிட்டன் உறவுகள் குறித்து பிரிட்டிஷ் தலைவர்களுடன் பேச்சுகள் நடத்தினர்.

பிரிட்டிஷ் பிரதமர் திரு ஹரோல்ட் வில்ஸனுடன் பிரதமர் சாஸ்திரி நடத்திய பேச்சுக்களில் சீன-இந்திய தகராறு, சீன அணுகுண்டு வெடிப்பு உட்பட பல்வேறு சர்வதேசப் பிரச்னைகளும் இடம் பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது

நேற்றுகாலை இந்தியப்பிரதமர் திரு சாஸ்திரி ஒரு அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையில் இந்தியாவுக்கு உதவிகோரும் பட்சத்தில்தாம் லண்டன் வரவில்லை என்றும் நெருக்கடிகளைத் தணித்து ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வதற்காகவே இங்கு விஜயம் செய்திருப்பதாகவும் பிரதமர் சாஸதிரி தெரிவித்துள்ளார்.

"பலநாட்டுத் தலைவர்களுக்கிடையேயும் அடிக்கடி பேச்சுகள் நடைபெறுவது மிகவும் அவசியமாகும். இந்தப் பேச்சுவார்த்தைகளில் உடன்பாடுகள் எதுவும் ஏற்படாவிட்டாலும் தங்களிடையே தோன்றும் கருத்து வேறுபாடுகளை நீக்க இந்தச் சந்திப்புகள் பெரிதும் உதவலாம். உலக நன்மைக்கும் இது நல்ல முயற்சி" என்றும் பிரதமர்சாஸ்திரி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் சாஸதிரி நேற்று லண்டனில் பல சரித்திர பூர்வமான இடங்களைப் பார்வையிட்டார். நேற்றிரவு அவர் நடன நிகழ்ச்சியொன்றிலும் கலந்து கொண்டார். கடந்த வியாழக்கிழமை லண்டன் சென்ற திரு. சாஸதிரி நாளை திங்கட்கிழமை புதுடில்லி திரும்புவார்.

நமது விஜயம் நல்ல பலனை அளித்துள்ளதாக அவர் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

## பாப்பரசர்முன் மாய மங்கை

பம்பாய், டிச. 6

பாப்பரசர் போல், இந்தியாவில்தங்கியிருந்த நாட்களில் அவருக்குசில அதிசய சம்பவங்கள் ஏற்பட்டன.

பம்பாயில் அவர், பொருட்காட்சி நிலையத்துக்கு விஜயம் செய்திருக்கையில் ஒரு அட்டை தடுப்புக்கு அடியிலிருந்து ஒரு பெண்மணி பாப்பரசர் முன் திடீரெனத் தோன்றி அவருடைய கரத்தைப் பற்றிக் கொண்டு, மோதிரத்தை முத்தமிட்டுவிட்டு திடீர் என மறைந்துவிட்டார்.

எதிர்பாராத விதமாக ஏற்பட்ட இந்தச் சம்பவம் பாப்பாண்டவருக்கு அதிர்ச்சியைஉண்டுபண்ணியது. மேற்கூறப்பட்ட பெண்மணி, சாம்பல் நிற சேலை அணிந்திருந்தார்.

பாப்பரசரைச் சுற்றிலும் நின்று பந்தோபஸ்து செய்துகொண்டிருந்த அதிகாரிகளும் இந்தச் சம்பவம் கண்டு திடுக்குற்றனர்.

## சென்னை மேயர் நடிக்க மாட்டார்

சென்னை, டிச. 6

சென்னை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திரு. சிட்டிபாபு, ஒரு படத்தில்நடித்துக்கொண்டிருந்தார் மேயர் பதவிக்காலம் முடியும் வரை படத்தில் நடிக்கப்போவதில்லை என்று அவர் அறிவித்துள்ளார்.

## ராணியை சாஸ்திரி சந்தித்தார்

லண்டன், டிச. 6

இங்கு விஜயம் செய்த இந்தியப் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரிக்கு, எலிஸபெத் மகாராணி பேட்டியளித்தார். இவர்களின் சந்திப்பு பக்கிங்ஹாம் அரண்மனையில் இடம் பெற்றது

## ரூ. 60 லட்சம் கறுப்புப் பணம் மோசடி அம்பலம்

பம்பாய், டிச 6

அறுபதுலட்சம் ரூபாவுக்குக் கணக்கில் வைக்கப்படாத பணம் சம்பந்தமான பிலிம் நிதி வசதி மோசடி ஒன்றை பம்பாய் வருமானவரி அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

ஒரு நகர பிலிம் வட்டிக்காரரிடமிருந்து முப்பது லட்சம் ரூபா பெறுமதியுள்ள அறுமத்து உண்டியல் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து இந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டது.

வரி ஏய்ப்பவர்களிடமிருந்து குறைந்த வட்டியில் கள்ளப் பணத்தை, சிலவட்டிக்குப்பணம் கொடுப்பவர்கள் கடன் வாங்கி, அதிகவட்டிக்கு சினிமா படத் தயாரிப்பாளர்களுக்குக் கொடுத்து வட்டி வித்தியாசத்தை இலாபமாகச் சம்பாதிக்கின்றனர் என்றும் இதனை அதிகாரிகள் இப்பொழுது கண்டுபிடித்து விட்டதாகவும் சொல்லப்படுகிறது.

## 'ஒப்பில்லா அனுபவம்'

### இந்திய விஜயம் குறித்து ரோமில் பாப்பரசர் கருத்து

வத்திக்கான் நகர், டிச. 6

பம்பாய்க்குச் சென்றிருந்த பரிசுத்த பாப்பரசர் போல், நேற்று வத்திக்கானநகர் திரும்பினர். பம்பாயில நடைபெற்ற சற்பிரசாத மகாநாடு எனப்படும் சர்வதேச சுத்தோஸ்திர மகாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு நான்கு தினங்கள் அங்கு தங்கி ரோம் திரும்பிய பரிசுத்த பாப்பரசரை மக்கள் உற்சாகமாக வரவேற்றனர். இத்தாலிய பிரதமரும் உயர் பிஷப்புகளும் பரிசுத்த பாப்பரசரை எதிர்கொண்டழைத்தனர்.

அப்பொழுது அவர் பேசுகையில், இந்தியாவுக்குச்சென்றதன் மூலம் தமக்கு ஒப்பில்லாத அனுபவம் ஏற்பட்டுள்ளது என்றும் இந்தியாவுக்கு விஜயம் செய்த சொற்ப காலத்தையும் தம்மால் மறக்கமுடியாதென்றும் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்ததன் மூலம், அங்குள்ள கலை, கலாச்சாரங்கள், தார்மீக பண்புகளை நன்கு தெரிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்று கூறிய பாரப்ரசர் போல், இந்தியாவின் முன்னேற்றத்தில் தாம் அதிக கவனம் செலுத்தப்போவதாகவும் தெரிவித்தார்,

நேற்று பம்பாய் விட்டுப் புறப்படுகையில், பாப்பரசர் போல் விமானத்திலிருந்து கொண்டே ஒரு வானொலிச் செய்தியை ஒலிபரப்பினர். தமது விஜயத்தின் போது தமக்களிக்கப்பட்ட அன்பு உபசரணைக்காக இந்திய ஜனாதிபதிக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் அவர் நன்றிதெரிவித்தார்,

## நாய் வளர்ப்பதில் ஆண், பெண் ஆர்வம்!

ஸ்டட்கார்ட், டிச. 6

மேற்கு ஜெர்மனியில் பரும்பாலோர் நாய்களைத் தங்களது செல்லப் பிராணிகளாக வளர்த்து வருகிருர்கள். மேற்கு ஜெர்மனியர்களின் செல்லப்பிராணிகளைப் பற்றி கணக்கெடுத்ததில் ஆண்களில் 53 வீதமும் பெண்களில் 50 வீதமும் நாய் வளர்ப்பதில் நாட்ட முடையவர்களென்றும், குதிரையை 19 வீதத்தினரும், பூனையை பெண்களில் 11 வீதத்தனரும் ஆண்களில் 6 சதவீதத்தினரும் வளர்க்கின்ருர்களெனவும் தெரிகிறது. ஹெஸ்லியா மாகாணத்தில் நாய்கள் அதிகம். அங்கு 67 வீதத்தினர் வளர்க்கிருர்கள். ஆண்களில் 7 வீதத்தினரும், பெண்களில் 17 வீதத்தினரும் எந்த மிருகத்தையும் விரும்பவில்லை.

## செயற்கைக் கடல்!

ஹாம்பர்க், டிச. 6

ஆழ்கடலில் ஒருகப்பல் அலைமோதல்களை எந்த அளவுக்குத் தாங்கக்கூடியது என்பதைப் பரிசோதனை செய்து அறிந்து கொள்வதற்காக மேற்கு ஜெர்மனியில் உருவாகிய ஹாம்பர்க்கிலுள்ள உலகப் புகழ்பெற்ற கப்பல் கட்டும் தளத்தில் 'செயற்கைக் கடல்' ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு தயாரான கப்பலை இந்தக் கடலில் மிதக்கவிட்டு, கடல் அலைமோதினால் கப்பல் எப்படியெல்லாம் அசையுமோ அதே போன்று மின்சார சாதனங்கள் மூலம் கப்பலை அசைய விடுகிருர்கள். அப்போது கப்பலின் தாக்குப் பிடிக்கும் ஆற்றலைக் கணக்கிடுகிருர்கள். மணிக்கு 70 கமல்வேகத்தில்இக்கடலில் கப்பலை ஓட்டியும் சோதனை செய்கிருர்கள.

## சமாதியில் கிடைத்த புதையல்!

### 2-வது நூற்ருண்டை சேர்ந்தவை

டமாஸ்கஸ், டிச. 6

இங்குள்ள தெற்கு எல்லைப் பகுதியில், ஒரு இடத்தை இராணுவத்தினர் தோண்டிக் கொண்டிருக்கையில், ஏராளமான தங்க நகைகளும், வைரப் பதக்கங்களும் அடங்கிய புதையலைக் கண்டெடுத்தனர்!

இந்தப் புதையல் டமாஸ்கஸ் நூதனசாலைக்கு கொண்டு வரப்பட்டது. கிறிஸ்துவுக்கு பின்னர் இரண்டாவது நூற்ருண்டில் வாழ்ந்த ஒரு ஸிரியா இளவரசியின் சமாதியில் இந்தப் புதையல் காணப்பட்டது.

இளவரசியின் ஜரிகைஆடைகள் சிரழிந்துவிட்டபோதிலும் ஜரிகை நூல்கள் அப்படியே இருப்பதாக ஸிரியா தொல்பொருள் இலாகா டைரக்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார்.

## இராணுவ அதிகாரிபோல் நடித்து மோசடி!

### எதிரிக்கு 19 மாதம் சிறை

சென்னை, டிச. 6

இராணுவ அதிகாரிபோல நடித்து, மோசடி செய்ததாக பஞ்சாப் லூதியானவைச் சேர்ந்தகுருபக்ஸ்சிங் (60வயது) என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கில், அவருக்கு 19 மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்டம்பர் மாதம் 5-ம் திகதி திருவல்லிக்கேணியிலுள்ள விளையாட்டுச்சாமான்கள் விற்பனைக் கடையொன்றுக்குச் சென்று, தாம் நெல்லூரில் உள்ள இராணுவ பிரிவின் தளபதி என்று கூறி 3200ரூபா பெறுமதியான பொருள்களுக்கு ஆடர் கொடுத்தார் என்றும் அவரிடமிருந்து 3000 ரூபா ரொக்கப் பணமும் பெற்றுக் கொண்டார் எனவும் கூறப்படுகிறது.

இவர் மீது தொடரப்பட்ட வழக்கின் விசாரணை முடிவில் ஒரிசா மாகாண மாஜிஸ்திரேட் திரு. பி. குப்புசாமி நாயுடு எதிரிக்கு 19 மாத கடுங்காவல் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

## வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

டக்கா, டிச. 6

கடந்த 60 தினங்களாக வேலைநிறுத்தம் செய்த ஐந்து சணல்ஆலைத் தொழிலாளர்கள் தங்களது வேலைநிறுத்தத்தை இன்று கைவிட்டனர். இவர்கள் நாளை வேலைக்குத் திரும்புவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## யுதாண்ட் சுகயீனம்

நியூயோர்க், டிச. 6

ஐக்கியநாடுகள் பொதுக் காரியதரிசி யுதாண்ட் சுகயீனம் காரணமாக நேற்று முன்தினம் இங்குள்ள ஆஸபத்திரியொன்றில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று இவருக்கு 'எக்ஸ்-றே' பரிசோதனை நடைபெற்றது. அவரின் உடல்நிலை திருப்திகரமாகவிருப்பதாக அறிவிக்கப்பட்டது. மேலதிக வேலைகள்தான் அவரது சுகவீனத்துக்கு காரணமாம்.

## போப வழங்கிய பானம்

### பானத்தின் நிறம்கண்டு ராதாகிருஷ்ணன் தயக்கம்

பம்பாய், டிச. 5

பாப்பரசர் இங்கு தங்கியிருந்த பொழுது, அவரைத் தரிசிக்க இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் இங்கு வந்திருந்தார். பாப்பரசரைக்கண்டு அளவளாவிக் கொண்டிருக்கையில், ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணனுக்கு பானம்வழங்கப்பட்டது. "தயவு செய்து இதை அருந்துங்கள்" என்ருர் பாப்பரசர்

பானம் சிவப்பாக இருந்தது. இதனைக் கண்டு டாக்டர் ராதாகிருஷ்ணன் சிறிது தயங்கினர் மதுவோ என்று சந்தேகித்து 'இது என்ன?' என்று கேட்டார் ராதாகிருஷ்ணன்.

சிறிது நேரம் நிசப்தம் நிலவியது.

சாதாரண பானம்தான் என்று பம்பாய் ஆர்ச்பிஷப்கார்டினல் கிரேஷியஸ் சொன்னதும் ராஷ்டிரபதி அந்தப் பானத்தை மெதுவாக அருந்தினர்,

## நியூயோர்க் பேச்சுக்கள்

நியூயோர்க், டிச. 6

அமெரிக்க, ரஷ்ய வெளிநாட்டு மந்திரிகள் நேற்று இங்கு மீண்டும் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினர்கள்.

அமெரிக்க ராஜாங்க உதவிக காரியதரிசி திரு. டீன் ரஸ்கும், ரஷ்ய வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிக்கோவும் நேற்றும் சந்தித்து சர்வதேச பிரச்னைகள் குறித்து பேச்சுக்கள் நடத்தினர்கள். அவர்கள் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்துவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## காந்திஜி கொலை பற்றிய விபரம்

### மீண்டும் விசாரணை

புதுடில்லி, டிச. 6

மகாத்மாகாந்தியைகோட்ஸே கொலை செய்ய உத்தேசித்திருந்தது பற்றிய விபரங்கள் முன்னதாகவே தனக்குத் தெரியுமென்று திரு. கேட்கர் கூறியதுபற்றி சட்ட நிபுணர்களைக்கொண்டு ஒரு விசாரணை நடத்துவதென்று இந்திய அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக உள்நாட்டு மந்திரி திரு. நந்தா தெரிவித்துள்ளார்.

## சீனு மறுப்பு

டோக்கியோ, டிச. 6

ஜப்பான் பிரதமரின் அதிகார சார்பற்ற தூதராக பீகிங் செல்ல திட்டமிட்டிருந்த ஜப்பான் பார்லிமெண்ட பிரமுகர்களில் ஒருவரான திரு. ஷூவி குஞேவுக்கு கம்யூனிஸட் சீனு விஸா வழங்க மறுத்துவிட்டது.

சீனுவுடனுன உறவுமுறைகளில் ஜப்பானிய அரசாங்கம் பின்பற்றிவரும் ஜாக்கிரதையான கொள்கைக்கு பீகிங்கின் இந்த நடவடிக்கை ஒரு முற்றுப் புள்ளி வைப்பது போலாகும் என்று கருதப்படுகிறது.

~சினிமா விமர்சனம்~

# மனிதன் மாறவில்லை

கொள்கையை மாற்றினன், கோலத்தை மாற்றினன் கட்சியை மாற்றினன்...

இலங்கை அரசியல் நிலை பற்றி ஏதோ சொல்கிறேன் என்று நினைத்துவிடாதீர்கள். யாழ்ப்பாணம் ராஜா தியேட்டருக்கு சிலர் வந்திருக்கிருர்கள், வேஷம் போடுகிருர்கள், ஆடுகிருர்கள், பாடுகிருர்கள், சமையல் செய்கிருர்கள், வயல் உழுகிருர்கள். ஆனல் மனிதர்கள் மாருமலே இருக்கிருர்கள். இப்பொழுது புரிகிறதா? 'மனிதன் மாறவில்லை' என்ற சினிமாப் படத்தைத்தான் சொல்கிறேன்.

நாகிரெட்டி சக்ரபாணி தயாரித்த விஜயாவின் வெளியீடான 'மனிதன் மாறவில்லை' படத்தில் சாவித்திரி-ஜெமினி, நாகேஸ்வரராவ்-ஜமுனா, ஏ. வி. எம். ராஜன்-விஜயலட்சுமி ஆகிய இளம் ஜோடிகளும், சாரங்கபாணி-வி. டி. ராஜகாந்தம் ஜோடியும், நாகேஷ், சட்டாம்பிள்ளை, அப்பா ரங்கராவ், வில்லன் டி. கே. ராமச்சந்திரன், எம். எஸ். சுந்தரிபாய் ஆகியோரும் நடிக்கிருர்கள். அதாவது நட்சத்திரங்கள் நிறைந்த படம்.

பணத் திமிரும் அகம்பாவமும் இறுதியில் அடிபணிந்தே தீரும் என்பதுதான் கதையின் கரு.

நிறைந்த ஆஸ்தியுடன் அருமை மகளையும் வைத்துக்கொண்டிருக்கும் சப்பம்மா (சுந்தரிபாய்) தனது மகளை (ஜமுனா) மணமுடிக்கும் மாப்பிள்ளையை வீட்டோடு வைத்திருக்கப் படும்பாடு தானுகக் கிடைத்த மாப்பிள்ளை (நாகேஸ்வரராவ்) வீட்டோடு இருந்து படுத்தும்பாடும் மூத்தாள் மகளை (சாவித்திரி) வேலைக்காரியாக வைத்து நடத்தி வேலைக்காரனுக வந்த (ஜெமினி கணேசன்)வனின் மீதே கல்யாணங்களை நடத்தி முடித்து மருமகனின் அத்தையிடம் அடிவாங்கி அடங்கி ஒடுங்கி வாழ்வதும் முடிவில் அகந்தை நீங்கி தான்செய்த கொடுமைகளுக்காக வேலைக்காரியிடமே மன்னிப்புக் கேட்பதும் நடிப்பாகவே தெரியவில்லை. இரண்டு புத்திரர்களுக்கும் பெண்பார்த்த அப்பா (ரங்கராவ்) பெண்களையும் பெண்ணின் தாயையும்பற்றித் தெரிவித்து அவர்களை வழிக்குக் கொண்டுவர அனுமதி கொடுப்பதும் பிள்ளைகளின் விருப்பத்துக்குத் தலையசைப்பதும் ரங்கராவினுல்தான் முடியும். பழகிப்போன பாத்திரத்தில் பண்பட்ட நடிப்பு. நாகேஷ் சில காட்சிகளிலேயே தோன்றுகிருர். ஹோட்டலில் சப்ளையராகவும் அவர் காசைத் திட்டுதியும் 'கஸ்டமர்களுக்கு' தோசையை விட்டெறிகிருர்! ஜெமினி ஆடுகிருர், கார் ஓட்டுகிருர், சாவித்திரியுடன் காதல் செய்கிருர். இது போதுமே. சாவித்திரி அடக்கமான பெண்ணுக நடித்தாலும் இறுதிக் காட்சியில் வைசாலியையும் காட்டி சபாஷ் பெறுகிருர். ஜமுனா தொக்காத் தோன்றி வெறுப்பைச் சம்பாதித்த போதிலும் கிரஹலட்சுமியாகி பாராட்டைப் பெறுகிருர். நாகேஸ்வரராவ் 'தமிழ்' தெரிந்த காதுகளுக்கு சிறிது கஷ்டத்தைக் கொடுத்தாலும் குடிகாரன் நடிப்பிலும் காதல நடிப்பிலும் குறை சொல்ல இடமில்லை.

விஜயலட்சுமியின் நடனம் சிறப்பாக அமைந்துள்ளது.

காதல், வீரம், நகைச்சுவை ஆகிய பல அம்சங்களும் நிறைந்த படம் 'மனிதன் மாறவில்லை'. குடும்ப சகிதம் பார்த்துப் பொழுது போக்கலாம்.

– 'திரைவண்டு'


**ஸ்ரீ மனோகரா**
(யாழ்ப்பாணம்) போன்: 485
6-30 மட்டும்
**சதி அனுசூயா**
4-00—9-45 பி. ப
SON of ZORRO

**ராஜா சினிமா (சுழிபுரம்)**
இப்பொழுது
திரையிடப்படுகிறது
சிவாஜி, பத்மினி, ஜெமினி
முதலியோர் நடித்த
**கப்பலோட்டிய தமிழன்**

REGAL — JAFFNA
NOW SHOWING
World's Best Show of Shows!!
FORBIDDEN TEMPTATIONS
(Totalscope-color) (Adults only)

**2-வது மகத்தான வாரம்!**
**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **விஜயா** (மட்டக்களப்பு)
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **விஜிதா** (அட்டன்)
தீந்தமிழால் இறைவனைப் பாடி, தெவிட்டாத
பக்தியை மூட்டி,
தெய்வத்தின்
நிலை அடைந்து
தமிழர் உள்ளத்தில்
வாழும் - பட்டினத்தார்



**பிரபல**
**பின்னணி பாடகர்**
**டி. எம்.**
**சௌந்தரராஜன்**
எம். ஆர். ராதா
ஜெமினி சந்திரா
எஸ். ராமராவ்
எஸ். டி. சுப்புலக்ஷ்மி
எஸ். ஆர். ஜானகி
நடித்த
# பட்டினத்தார்
சங்கீதம்: ஜி. ராமநாதன் — டைரக்ஷன்: கே. சோமு


## கிராமசபை தீர்மானங்கள்

முல்லைத்தீவு, ஞாயிறு

முள்ளியவளை நீராவிப் பிட்டி பொதுமயானத்தை இலாகாவிடம் ஒப்படைப்பதென்ற தீர்மானம் முள்ளியவளை கிராமசபைக்கூட்டத்தில் 9-ம் வட்டார அங்கத்தவரும் உபதலைவருமான திரு. எஸ். சோமசுந்தரம் பிள்ளையால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டம் கிராமசபைத் தலைவர் திரு. கே. செல்லத்தம்பியின் தலைமையில் நடைபெற்றது.

முள்ளியவளை கிராமசபைக்குச் சொந்தமான காணியில் பத்துஏக்கரை பொதுச்சுடலையொன்றுக்காக ஒதுக்குவதென்றும் தண்ணீர்ப்பஞ்சத்தை அகற்றுவதற்காக பொதுக் கிணறு ஒன்றை வெட்டுவதென்றும் மற்றும் சில தீர்மானங்களும் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

## மண்கும்பான் கொலைவழக்கு 10-ம் திகதி ஒத்திவைப்பு

ஊர்காவற்றுறை, ஞாயிறு

வேலணையைச் சேர்ந்த மண்கும்பான் வாசியான முருகேசு சுப்பையா என்பவரைக் குத்தூசியால் குத்திக் கொலை செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை நாகநாதி மீது குற்றஞ்சாட்டி ஊர்காவற்றுறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் நீதிபதி திரு. கி. ஜே. இராசரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

எதிரிதரப்பில் புரக்டர் எஸ். வி. கதிரவேலு புரக்டர் திரு. நடராசாவின் அனுசரணையுடன் ஆஜரானர். வழக்காளி சார்பில் புரக்டர் ஜிம்மி-இராசரத்தினம் ஆஜரானர்.

மண்கும்பானைச்சேர்ந்த சின்னையா சிவஞானம் சாட்சியமளித்தார்.

மேல்விசாரணை இந்தமாதம் 10-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## 'ஆடம்பர செலவை நீக்கவேண்டும்'

சுழிபுரம், ஞாயிறு

சைவ ஆலயங்களில் நடைபெறும் ஆடம்பரச் செலவுகளை கட்டுப்படுத்தி, தமிழ்ப் பகுதிகளில் பல தொழில் நிலையங்களை நிறுவி வேலை வாய்ப்பை உண்டுபண்ண வேண்டும் என சகல ஆலயங்களின் நிர்வாகிகளைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று வழுக்கம்பறை அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெற்ற இளைஞர் சங்க விசேட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எல்லா ஆலய நிர்வாகிகளுக்கும் இத்தீர்மானம்பற்றி அறிவிக்க ஒரு சபை நியமிக்கப்பட்டது.

# சந்தேகத்தின் மீது கைதான மயிலிட்டி வாலிபன்
## தன்னூடு, பெற்றேர் பற்றி எதுவும் தெரியாதென்கிறர்

மாவிட்டபுரம், ஞாயிறு

மயிலிட்டியைச் சேர்ந்த 22 வயது இளைஞன் கிருஷ்ணன் என்பவரை சட்டவிரோத குடியேற்றக்காரரென காங்கேசன்துறை சட்டவிரோத குடியேற்றத் தடுப்பு பொலிஸைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள்களான ஹட்சன் சில்வா, சந்திரசேகரம் ஆகியோர் சந்தேகத்தின் மீது கைதுசெய்துள்ளார்கள்.

கிருஷ்ணன், பொலிஸாருக்கு கொடுத்த வாக்குமூலத்தில் தான் இலங்கைப் பிரஜையோ அல்லது இந்தியப் பிரஜையோ என்று தெரியாதென்றும் தன்னுடைய பெற்றேர்கள் யார் எங்கு இருக்கிருர்கள் என்று கூடத்தெரியாதென்றும் ஆனல் தான் மயிலிட்டியைச் சேர்ந்த சிவனடியாரைத் தான் ஐயா என்று கூப்பிடுவதாகவும் கூறியுள்ளார்.

மேலும் கிருஷ்ணன் கூறும் போதுதான் தனது அறிவிற்கு எட்டியவரையில் சிவனடியாருடன்தான் வசிப்பதாகவும் அவரைவிட்டு ஒருபொழுதும் பிரியவில்லையென்றும் கூறியுள்ளார்.

இதுபற்றி காங்கேசன்துறை பட்டின சபை அங்கத்தவரும் மயிலிட்டிவாசியுமான திரு. எஸ். சிவனடியாரை காங்கேசன்துறைப் பொலிஸார் விசாரணை செய்தபோது கிருஷ்ணன் தன்னுடன்தான் வசிப்பதாகவும், தான் அவரின் தகப்பனில்லையென்றும், அவரை ஆறு வயதில் தனது மாமனுர் கிளிநொச்சியிலிருந்து கூட்டி வந்ததாகவும் கிருஷ்ணன் தன்னிடமிருந்தபோது இரு தடவை ஓடியதாகவும் திரு. சிவனடியார் கூறியுள்ளார்.

கிருஷ்ணனை 1500 ரூபாய் பிணையில் செல்ல அனுமதித்த பொலிஸார்மேற்கொண்டு விசாரணை செய்து வருகிருர்கள்.

## 'டாக்டருக்கு வாரண்ட்'

ஊர்காவற்றுறை, ஞாயிறு

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நெடுந்தீவுக் காரியாதிகாரியால் தொடரப்பட்ட வழக்கு ஒன்றில் பிரதான சாட்சியான நெடுந்தீவு டி. எம். ஓ டாக்டர் வில்லியத்திற்கு நீதிபதி வாரண்ட் பிறப்பித்தார்.

காலநிலமை செப்பமில்லாது அபாயகரமாக இருந்தமையால் வரமுடியவில்லை எனக் கடிதம் மூலம் டாக்டர் கோர்ட்டிற்குத் தெரிவித்திருந்தார்.

எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்பு பலதடவை இந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டது என்றும் சாட்சியக்காரர் அனைவரும் நெடுந்தீவு வாசிகளாய் இருந்தும் இன்றுசமூகம் கொடுத்துஇருக்கிருர்கள் என்றும் குறிப்பிட்டுவழக்கைபின் போட வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டார்.

டி. எம். ஓவை ஜனவரி 7ந் திகதி கோர்ட்டிற்கு வரும்படி வாரண்ட் பிறப்பித்து, 200 ரூபா பிணையில் செல்லவேண்டுமென்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

## மூளாயில் கண் வைத்தியம்

சுழிபுரம், ஞாயிறு

மூளாய் கூட்டுறவு வைத்திய சாலையில் கண் நோய் சம்பந்தமான வியாதிகளை கவனிப்பதற்கு இரண்டு கண் வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் ஒவ்வொரு மாதமும் எட்டு நாட்களுக்கு மூளாயில் தங்கி கண் நோயாளர்களுக்கு சிகிச்சை செய்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு தினங்களாக எண்பதுக்கு மேற்பட்ட நோயாளர்களுக்கு வைத்தியம் செய்யப்பட்டுள்ளது. முப்பத்தைந்து நோயாளருக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

## புகை விடாத எஃகு ஆலை!

தியூஸ்பர்க், டிச. 6

ஐரோப்பாவிலேயே மிகவும் நவீனமான எஃகு ஆலை, மேற்கு ஜெர்மனியில் தியூஸ்பர்க்—ஹாம்போர்ன் என்ற இடத்தில் அமைந்துள்ளது. இந்த ஆலையிலிருந்து கழிவுப் புகை அல்லது கெட்ட வாயு சிறிதளவுகூட வெளியேறுவதில்லை. இங்கிருந்து வெளியாகும் கழிவுத் தண்ணீரும் மிகவும் சுத்தமாக இருக்கிறது. இந்நீரில் மீன்கள்கூட வாழ்கின்றன. இந்த ஆலையின் கழுவுப் புகையையும் வாயுவையும் உட்கொள்ளுவதற்காக 35 லட்சம் டாலர்செலவில்நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. இங்கு ஆண்டுதோறும் 30 லட்சம் டன் எஃகு உற்பத்தியாகிறது.

## மரங்களை வெட்டியது யார்?

உடுப்பிட்டி, ஞாயிறு

நெல்லியடி — யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நெல்லியடிச் சந்தையிலிருந்து சுமார் 250யார் தூரத்திற்கு கடைகளின் முன்பாக நிழலுக்கு நாட்டப்பட்டிருந்த காட்டு மரவள்ளி மரங்கள் இரவோடிரவாக யாரோ இனந்தெரியாதவர்களால் வெட்டிவீழ்த்தப் பட்டுள்ளன. இவ்வக்கிரமச் செயல் குறித்து பொலிசாரிடம் புகார்செய்யப்பட்டுள்ளது. மேலும் பருத்தித்துறை பொலிசார் நெல்லியடிச் சந்தியில் இரவு நேரங்களில் சரியான காவல் போடுவதில்லையென்றும் புகார்செய்யப்பட்டுள்ளது.


இலங்கை எங்குமுள்ள
வியாபாரிகளிடமிருந்தும்
**கொலிபிறி ஓடிகொலன்**
உடன் பெற்றுக்கொள்ளவும்
— முக்கிய அறிவிப்பு —
கலப்பில்லாத நல்ல பொருளைப்
பெறுவதற்கு மூடியிலுள்ள
சிவத்த சீல் உடையாமல்
இருக்கின்றதா என்பதைக்
கவனிக்கவும்.
சிறந்த ஜெர்மனி ஓடிகொலனையே
பாவியுங்கள், கொலிபிறி என்றே
கேளுங்கள்.
விற்பனையாளர்:-
ஏ. வி. ஆர். ஏ. அன் கோ.
19, செட்டியார் தெரு, கொழும்பு
தொலைபேசி எண்: 7211, 7212



# உரிமை மறுக்கும் அரசாங்கங்களை அடுத்தடுத்து வீழ்த்துவோம்"

—வட்டுக்கோட்டை எம். பி.

# அரசாங்கத்தை ஆக்குவதும், அழிப்பதும், தமிழர் கையில்தான் தங்கியுள்ளது.

—உடுவில் எம். பி.

மாவிட்டபுரம், ஞாயிறு

"பாராளுமன்றத்திற்கு வெளியில் நடந்த சம்பவங்களைப்போல, மேலும் பலாத்காரத்தை தூண்டிவிட்டு அதைச் சாதகமாக்கி அவசரகாலச் சட்டத்தை அமுலாக்கி தேர்தலை தள்ளிவைக்கும் முயற்சி நடைபெறாது விழிப்புடன் இருக்கவேண்டியது இந்நாட்டு மக்களின் கடமையாகும்" என்று வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் இணுவில் பிள்ளையார் கோவில் வீதியில் நேற்று மாலை நடைபெற்ற தமிழரசு கட்சிக் கூட்டத்தில் பேசும் போது கூறினர்.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து கூறியதாவது:

"ஜனநாயக நாட்டில் அரசாங்கம் பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப் பட்டால் உடனடியாக அரசாங்கம் இராஜினாமாச் செய்திருக்க வேண்டும் அல்லது பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் நடத்த ஒழுங்கு செய்திருக்க வேண்டும். ஆனால் இதுவரை எதுவும் நடைபெறவில்லை.

இந்த நாட்டிலுள்ள அரசியற்கட்சிகள் சிதறிக் கிடக்கின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிதறிவிட்டது. சமசமாஜக் கட்சியின் சாயம் வெழுத்து விட்டது. கம்யூனிஸ்கட்சி சிதைந்து விட்டது. ஆனால் தமிழரசுக் கட்சி தளம்பாது நிற்கின்றதற்குக் காரணம் நாம் சத்தியம், நேர்மை என்ற ஆயுதங்களைக் கொண்டு இயங்குவதுதான்.

1960-ம் ஆண்டு எமது உதவியை நாடியது போல, சென்ற வியாழக்கிழமை சாகுந்தறுவாயில் எம்மை நாடி வந்தனர் அமைச்சர் பலர். ஆனால் மலைநாட்டுத் தமிழரை நாடு கடத்த ஒப்பந்தம் செய்துவிட்டு நமது உதவியைப் பெற முனைவது பகற் கனவாகுமென்று கூறினோம். நாம் வேறொன்றும் செய்யாவிட்டாலும் நமக்கு உரிமை மறுக்கும் அரசாங்கங்களை அடுத்து அடுத்து வீழ்த்தும் வேலையையாவது செய்துகொண்டிருப்போம். இதனால் நிச்சயம் எமது இலட்சியம் ஈடேறும். ஆகவே கடந்த காலங்களைப் போல மூவர்ணக்கொடியின் கீழ் ஒன்றுபட்டு சத்தியநெறியில் செல்வது தான் தமிழினத்திற்குள்ள ஓரே வழி".

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தலைமை வகித்துப் பேசுகையில் கூறியதாவது:

"இன்றைய அரசியல் சூழ்நிலையில் ஒரு விஷயம் அறியக் கூடியதாக இருக்கிறதென்னவென்றால் தமிழர்கள் எல்லோரும் ஒரு குடையின்கீழ் ஒற்றுமையாக இயங்கவேண்டுமென்பதே. நாம் ஒற்றுமையாகவும் கட்டுப்பாடாகவும் இருந்தால் அரசாங்கத்தை ஆக்கவும் அழிக்கவும் முடியும்.

1960-ம் ஆண்டுசிறிலங்காசுதந்திரக்கட்சியினரை ஆட்சியில் அமர்த்த அவர்கள் கொடுத்த வாக்குறுதியின் காரணமாக ஒத்துழைத்தோம். அவர்கள் ஆட்சிபீடத்தில் ஏறியவுடன் கொடுத்த வாக்குறுதிகளை மறந்து நடந்தார்கள். நாம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற சிம்மாசனப்பிரசங்கத்தில் நினைத்திருந்தால் ஒதுங்கியிருந்திருக்கலாம். ஒதுங்கியிருந்திருந்தால் இந்த அரசாங்கத்தை வீழ்த்தியிருக்க முடியாது. ஆனால் நாம் எந்தக் காரணத்தையொட்டியும் நேர்மையைக் கைவிட விரும்பவில்லை. எங்களுக்கு ஒரே ஒரு பாதைதான் இருந்தது. அது தான் இந்த அரசாங்கத்தைச் வீழ்த்துவது. அதைச் செய்துவிட்டுத் தான் வந்திருக்கிறோம். பாராளுமன்ற ஆசனத்தில் இன்னும் சில மாதங்கள் கஷ்டமில்லாமல் இருக்க விரும்பினால் நாம் பேசாமல் இருந்திருக்கலாம்.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காமல் இந்த நாட்டில் ஒரு அரசாங்கமும் ஆட்சி நடத்த இயலாது. மனிதனின் ஓர் அங்கம் பாரிசவாத கோயினால் பீடிக்கப்பட்டிருக்கையில் மற்ற அங்கங்கள் நன்கு இயங்கமாட்டா. அதேமாதிரியாகத்தான் அரசியலும் எல்லா இனத்தவர்களும் உரிமையுடன் பங்கு பற்றவேண்டும். நாம் உரிமையற்றவர்களாக பிணியினால் பீடிக்கப்பட்டிருக்கையில் அரசாங்கம் ஒருபோதும் நன்கு நடைபெற முடியாது.

ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு வி. நவரத்தினம் பேசுகையில் கூறியதாவது:- "நாம் சென்ற வியாழக்கிழமை அரசாங்கத்தைத் தோற்கடிக்கச் செய்ததன் மூலம் நாட்டை எதிர்நோக்கியிருந்த பெரும் ஆபத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளோம். இன்றேல் நாடு சர்வாதிகார ஆட்சியில் பீடிக்க பட்டிருக்கும். அரசாங்கம் சர்வாதிகாரப் பாதையில் செல்வதற்கான சகல வழிகளையும் செய்திருந்தது என்று திரு. சி. பி. டி. சில்வாவின் பேச்சிலிருந்து அறியக்கூடியதாக இருக்கிறது.

அரசாங்கம் தோற்கடிக்கப்படாமல் இருந்திருந்தால் எமது அடிப்படை உரிமைகள் கூட பறிபோயிருக்கும். எமது உரிமைகள் பறிபோகும் நேரத்தில் சிங்கள மக்களினதும் உரிமை பறிபோகும். இதிலிருந்து சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் நாம் காப்பாற்றியுள்ளோம். நாங்கள் இதைச் செய்யக்கூடியதாக இருந்தமைக்குக்காரணம் நாம் ஒரு குடையின் கீழ் திரண்டிருந்தமையே. நாம் சிதறியிருந்தால் ஒன்றும் சாதிக்க முடியாது."

யாழ். நகரசபைமேயர் திரு. எஸ். சி. மகாதேவா, திருமதி அமிர்தலிங்கம், புரக்டர் எஸ். நடராசா, பண்டிதர் இராசையா, திரு. ச. முத்துலிங்கம் ஆகியோரும் பேசினார்கள்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### திங்கள் 7-12-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 மெல்லிசை, 8-45 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை — மகேஸ்வரி அப்பாத்துரை, 7-15 பாட்டு — வி. விஜயசிங்கம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 எங்கள் விருப்பம், 9-30 தமிழ் மூலம் சிங்களம், 10-00 நேயர்விருப்பம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப பாடல்கள், 7-30 பாட்டு — மாலதி வெங்கட்ராமன்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 பாட்டு — மாலதி வெங்கட்ராமன், 1 30 வாத்திய இசை, 1-50 கதம்பம், 5-40 பொன்னெளிர் பாரதம் தொடர்நிகழ்ச்சி.

மாலை 5-15 திரைப்பட இசை, 5-45 இசைப்பயிற்சி.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 செய்திக் குறிப்புகள், 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 சர்வகலாசாலைகளுக்கு, 8-00 எஸ். ஆர். குப்புசாமி — பாட்டு, 8-30 சித்திரம் — வெற்றிவாகை, 9-30 நாதஸ்வரம் — ஆர். கிருஷ்ணமூர்த்திபிள்ளை.

## காங்கேசன்துறையில் விளையாட்டுமைதானம்

யாழ்ப்பாணம், திங்கள்

காங்கேசன்துறை மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் இன்று காங்கேசன்துறை பட்டினசபை மண்டபத்தில் நடைபெறும்போது வலிகாமம் வடக்குப் பகுதியிலுள்ள விளையாட்டுக்கழகங்களுக்கென ஒரு பொது விளையாட்டுமைதானம் அமைப்பதுபற்றி தீர்மானிக்கப்படும்.

காங்கேசன்துறை மாவட்ட உதவி பொலிஸ் சுப்பரின்டன்ட் திரு. வை. டி. சௌரத் இக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்.

காங்கேசன்துறை, தெல்லிப்பழை, சுன்னாகம், மல்லாகம், குரும்பசிட்டி, கட்டுவன், குப்பிளான், பண்டத்தரிப்பு, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களிலுள்ள விளையாட்டுக்கழகங்களைச் சேர்ந்த ஒரு வருடாந்த சுற்றுப்போட்டியை இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தின் உதவியுடன் நடாத்துவதுபற்றியும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படும். புது வருட உத்தியோகத்தர்களும் இக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்படுவர்.

## டிரிபேக் வெற்றி

சாவகச்சேரி, சனி

சாவகச்சேரி தெரிவுக் கோஷ்டிக்கும் டிரிபேக் கல்லூரியினருக்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் டிரிபேக் கல்லூரி 3—1 கோல்களால் வெற்றி பெற்றது போட்டிக்கு திரு. குலேந்திரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## இன்ஸ்பெக்டர் இடமாற்றம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

ஊர்காவற்றுறை பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் திரு சவுந்தரநாயகம் பதவி உயர்வு பெற்று யாழ்ப்பாணம்பொலிஸ் தலைமைக் காரியாலய குற்றத்தடைப் பகுதிப்பரிசோதகராக அடுத்தமாதம் 1-ந் திகதியிலிருந்து இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார்.

சுன்னாகத்தில் கடமையாற்றிய திரு. தியாகராசா ஊர்காவற்றுறை பொலிஸ் இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் அறியப்படுகிறது.

## தாய்லாந்தில் புரட்சி சதி

பாங்காக், டிச. 6

தாய்லாந்து மன்னர் காவற்படையின் அணிவகுப்புடன் சேர்ந்து புரட்சி நடத்த இராணுவ அதிகாரிகள் கோஷ்டியொன்று சதிசெய்ததாகவும் அவர்களிற் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளதாயும் தாய்லாந்து பிரதமர் அறிவித்துள்ளார்.

## திருவுளச் சீட்டு மூலம் சேவகர்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் கிராம சபைக்கு கந்தோர் சேவகர் ஒருவரைத் தெரிவுசெவதற்காக ஒருவிசேட கூட்டம் நடைபெற்றது. சேவகர் தெரிவு சம்பந்தமாக அங்கத்தவர்களின் தீர்மானத்தின் படி, எல்லோர் முன்னிலையிலும் திருவுளச் சீட்டு மூலம் மூவர் தெரிவுசெய்யப்பட்டனர். தெரிவு செய்யப்பட்ட மூவரில் ஒருவரை தெரிவு செய்வதற்கு உள்ளூராட்சி அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுவர் வைத்திய நிலையம்

நல்லூர், ஞாயிறு

சிறுவர் வைத்திய நிலையமொன்று நாளை காங்கேசன் துறைப் பட்டினசபை எல்லைக்குள் உள்ள மயிலப்பை என்னுமிடத்தில் அங்குரார்ப்பணஞ் செய்துவைக்கப்படவிருக்கிறது.

வீமன்காமம் ஆங்கில பாடசாலை ஆரோக்கியசபையின் முயற்சியினால் திறக்கப்படும் இந்த வைத்திய நிலையத்தில் சிறுவர்களுக்கு உண்டாகும் சகல நோய்களுக்கும் இலவசமாகவே சிகிச்சை அளிக்கப்படும்.

## 'குல்லாய் இல்லாதது நல்லாயில்லையே'

### எம். பி.க்கள் கண்டனம்

புதுடில்லி, டிச. 6

நேரு நாணயங்கள் வெளியிடப்பட்டது குறித்து லோக சபையில் சரமாரியாக கேள்விகள் கேட்கப்பட்டன.

குல்லாய் இல்லாமல் நேருவின் உருவம் பொறிக்கப்பட்டதைப் பல அங்கத்தவர்கள் ஆட்சேபித்தனர். அந்த உருவம் நேருமாதிரி இல்லை என்று அங்கத்தவர்கள் கூறினார்கள். இந்த யோசனையைக் கூறிய புத்திசாலி யார் என்றும் ஒருவர் கேட்டார்.

## உடல் உஷ்ணம் காட்டும் பொத்தான்

நியூயோர்க், டிச. 6

உடல் உஷ்ணத்தைக் காட்டும் உஷ்ணமானி அடங்கிய கஃப் லிங்குகள் (சட்டையின் கைப் பொத்தான்) இப்பொழுது இங்கு விற்பனைசெய்யப் படுகின்றன. இவற்றில் ஒரு கஃப்லிங் சென்டிகிரேட்டில் உடல் உஷ்ணநிலையைக் காட்டும். மற்றொன்று பாரன்ஹீட்டில் காட்டும்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

உயர்ந்த ரகங்கள்-கண்கவர் டிசைன்களில் டக்கா, பினையின் இன்னும் பல திணுசுகளில் கைத்தறிச் சேலைகள் விற்கப்படும். கௌசல் நூண்கலை நிலையம், 82, கொழும்புத்துறை ரோட், கண்டிக்குளி. 1152

### மகாபீரணவருபன் மென்மையின் அற்புதன்!

நான் ஆர்? என்பது:- மெய்யுணர்வின் அற்புதம்! காண்டல் கருதல் அளவைக்கு அடங்காது, ஓசையொலி அசைவின் நிலை கடந்து, போக்குவரவு அற்று, எங்கும் எல்லாமாகி நிறைந்து, தண்ணென்று-மெல்லென்று-இன்சுவைக்குள் அமர்ந்து, கோதிலாதும் குறைவிலாதும், விழுங்கும் அமுதம் போன்று, சுவைக்கும்பொருள், நான் ஆர்? என்ற தொடர்புகளை அறியவைக்கிறது!!

இறைக்கும் இயற்கைக்கும் ஆன்மாவுக்கும், நற்கிழமை பிறிதின் கிழமைக்கும் விதி விலக்கு அறிந்து அறம் பொருள் இன்பமூலம் வீட்டைக் காட்டித்தர, சாலோகத்தில் இல்லாது, சாமீபம் சாரூபமாகி "மௌனஉன்க" வைக்கும் போது, நான் ஆர்? என்ற தொடர்பின் சிக்கல்மாயம் மூன்றுய்விலகி வெளியாய்விடும்!!!

"வேதம் நான்கினும் மெய்ப் பொருள்" தமிழின் மெஸ்லோகையிற்றினைந்து, அருள் சுரக்கும் என்று காட்டினார்கள்! உண்மைத் தொடர்களால் அறிக!!

வித்துவக்கலைஞன் ஆசி, சாந்தகுரு, சன்மார்க்க தவகூடம், கந்தரோடை. 1186

## நன்றி

கருவில் ஐயனர் கோவிலில் சென்ற ஞாயிற்றுக்கிழமை (29-11-64) நடைபெற்ற எமது திருமண வைபவத்தின் போது நேரில் வந்தும் மணமகனில்லத்தில் நடைபெற்ற வரவேற்பின் போது நேரில் வந்தும் வாழ்த்துச்செய்திகள் அனுப்பியும் அன்பளிப்புகள் தந்தும் எம்மை மகிழ்வித்தும் ஆசீர்வதித்தும் சிறப்புறச்செய்த அன்பர்கள் நண்பர்கள், உறவினர்கள், ஆகியோருக்கும் எமது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ச. சத்தியோஜாதன்,
வித்தியாதேவி


நறுமணம் கமழும் மனோரம்மியமான

"ராதா"

★ ஜெகன் மோகன் ஜவ்வாது வத்தி
★ 99 ஸ்பெசல் ஜவ்வாது வத்தி
★ பத்மினி ஜவ்வாது வத்தி
★ ஸ்பெசல் அம்பர் வத்தி
★ இந்திராணி வத்திகள்

உங்கள் இல்லங்களை வாசனையால் பரிமளிக்கச்செய்கிறது.

இந்தியா வத்தி போன்ற அதிஉன்னத தயாரிப்புகள்

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்துகள், மருந்துச்சரக்குகள், வாசனைத்திரவ வியாபாரம்)

53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 541

"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# "தொழிலாளரை மதிக்காத அரசாங்கம் நிலைக்காது"

## தபால், தந்தி ஊழியர்சங்க ஆண்டு விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

தபால் - தந்தி ஊழியர் சங்கம் பல கோரிக்கைகளுக்காக அரசாங்கத்துடன் போராடிக் கொண்டிருக்கிறதென்றும் எத்தனையோ போராட்டங்களில் வெற்றி கண்டிருக்கிறதென்றும் எதிர்காலத்திலும் தபால்-தந்தி ஊழியர் தமது உரிமைகளுக்காகப் போராடி வெற்றி காண்பதற்கு பெரும் பலமும் ஒற்றுமையும் அவசியமென்றும் அகில இலங்கைத் தபால் தந்தி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. ஏ. விக்கிரமசிங்கோ இங்கு பேசுகையில் தெரிவித்தார்.

அகில இலங்கை தபால்-தந்தி ஊழியர் சங்க யாழ்ப்பாணக் கிளையின் 15-வது ஆண்டுவிழா நேற்றுக் காலை திரு. கா. தளையசிங்கத்தின் தலைமையில் யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலயத்தில் நடைபெற்றபோது விக்கிரமசிங்கோ உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை தொழிற்சங்க சம்மேளன யாழ், கிளையின் பிரதிநிதி திரு. இ. பொன்னையா பேசுகையில் தொழிலாளர்களின் முதுகெலும்பான 21 அம்சக் கோரிக்கைகளுக்காகப் போராடுவதாகக் கூறியவர்கள் திடீரென்று ஏற்பட்ட மந்திரிப் பதவி ஆசையினால் அதனை மறந்து அரசாங்கத்திடம் சாய்ந்து விட்டார்கள் என்றும் கூறினார்.

முற்போக்குச் சக்திகளிலிருந்து பிரிக்கப்பட்டு தொழிலாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க எந்த அரசாங்கம் முற்படுகிறதோ அந்த அரசாங்கம் நீண்டநாள் வாழமாட்டாதென்றும் அவர் சொன்னார்.

திருவாளர்கள்: மதநாயகா, எஸ். பத்மநாதன், வேதநாயகம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

புதுவருட உத்தியோகத்தர்கள் வருமாறு:—

தலைவர்: திரு. எஸ். ஸ்ரீபத்மநாதன், உபதலைவர்: திரு சேவையர், பிரதான காரியதரிசி: திரு. பொ. புண்ணியசிங்கம், நிர்வாக காரியதரிசி: திரு. ஏ. ஜோசேப், தனாதிகாரி: திரு. நிக்கிலஸ். ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.

## குணவர்த்தன குற்றச்சாட்டு

கொழும்பு, ஞாயிறு

பாராளுமன்றத்தில் நம்பிக்கையிழந்த ஒரு பிரதமர், நம்பிக்கையிழந்த பத்து நிமிடத்தில் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுமக்களுக்கும், மகாதேசாதிபதிக்கும் அறிவிக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் வீழ்ச்சியடைந்து 75 மணித்தியாலங்களுக்குப் பின்பும், பிரதமர் ராஜினாமா செய்யாதது அவரது பதவி ஆசையை எடுத்துக்காட்டுகிறதென்று கொழும்பு ஹைட்பார்க்கில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் திரு. பிலிப் குணவர்த்தன பேசும்போது கூறினார்.

அகில இலங்கைத் துறைமுகத் தொழிலாளர் யூனியன் காரியதரிசி திரு. டி. ஏ. பிரேமதாசா இக்கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

திரு. பிலிப் குணவர்த்தன தொடர்ந்து பேசும்போது, பிரதமர் தமது வானொலிப் பேச்சில்கூட, பாராளுமன்றம் கலைக்கப்படும் திகதியை வெளியிடவில்லையென்றும் அவரது வானொலிப் பேச்சில் அரசியல் நிலைமை பற்றிக் கூறப்படவில்லையென்றும் கூறினார்.

## காரைநகரில் மணிவாசகர் விழா

சுழிபுரம், ஞாயிறு

காரைநகர் மணிவாசகர் சபையினரால் மணிவாசகர் விழா இம்மாதம் 16, 17, 18, 19-ந் திகதிகளில் காரைநகர் சிவன் கோவில் மண்டபத்தில் நடாத்தப்படவிருக்கின்றது.

இவ்விழாவில் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம், யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு எஸ். சிவஞான சுந்தரம், திரு. கே. பி. ஹரன், வித்துவான் பொன். முத்துக்குமாரன், வித்துவான் க. வேந்தனார், வித்துவான் கார்த்திகேசு, வித்துவான் எஸ். கந்தசாமி, செல்வி புஷ்பா செல்வநாயகம் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள்.

திருவாதிரை தினத்தன்று வண்ணை திரு சி எஸ். எம். மணிபாகவதரின் சங்கீதகதாப் பிரசங்கமும் நடைபெறும்.

## ஜோன்ஸன் —வில்சன் இன்று பேச்சு

வாஷிங்டன், டிச. 6

அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸனுடன் பேச்சுகள் நடத்தும் பொருட்டு பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்ஸன் இன்று வாஷிங்டன் வந்து சேர்வார். பிரிட்டிஷ் பிரதமராக பதவியேற்ற பின்னர் அமெரிக்க அதிபரை திரு. வில்ஸன் சந்திப்பது இதுவே முதற் தடவையாகும்.

திரு. வில்ஸனுடன் நடத்தும் பேச்சுக்கள் குறித்து ஜனாதிபதி ஜோன்ஸன் கடந்த மூன்று தினங்களாக அமெரிக்க உயர் அதிகாரிகளுடன் ஆலோசனைகள் நடத்தினார். ஜோன்ஸன்—வில்ஸன் பேச்சுக்களில் சர்வதேசப் பிரச்னைகள் உட்பட பொதுப்படைக் குறைப்பும் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. இருவருடைய சந்திப்புகளின் போதும் இரு நாட்டு வெளிநாட்டு மந்திரிகளும் இருப்பார்கள். இருவரும் சுமார் 5 மணிநேரம் பேச்சுக்கள் நடத்துவார்கள்.

## பிலிப், ராஜரத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜரத்தின, குழப்பத்துக்குக் காரணமாக இருந்தவர் முன்னொருநாள் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர் எனக் கூறினர்.

இவ்விடத்தில் பொலிஸ் பந்தோபஸ்து பலப்படுத்தப்பட்டுள்ளது.

## வவுனியா மாணவர் வெற்றி

வவுனியா, ஞாயிறு

வவுனியா விவசாயப் பாடசாலை மாணவர்களுக்கும் மத்திய மகா வித்தியாலயத்திற்குமிடையே நடைபெற்ற ஓர் உதைபந்தாட்டப் போட்டியில் விவசாயப்பாடசாலை 2-0 கோல்களால் வெற்றி பெற்றது.

கிளிநொச்சி விவசாயப்பாடசாலை மாணவர்களுடன் விளையாடிய வவுனியா விவசாயப் பாடசாலை மாணவர்கள் 8-1 கோல்களால் கிளிநொச்சி விவசாயப்பாடசாலையை தோற்கடித்தனர், இதில் வவுனியா பாடசாலையைச்சேர்ந்த கப்டன் மூர்த்தி 5 கோல்கள் அடித்தார். ரகுநாதன், பசுபதி ஆகியோரும் திறமையாக விளையாடினர்கள்.

## 'இசை வளர்ச்சிக்கு ஒரு கல்லூரி தேவை'

நல்லூர், திங்கள்

"இன்றுள்ள சூழ்நிலையில் நம் இசை வளர்ச்சி அடைய ஒரேயொரு வழிதான் உண்டு. நம்மவரின் பேராதரவுடனும் அரசாங்கத்தின் உதவியுடனும் நம்நாட்டுக் கலைகள் எல்லாவற்றுக்கும் தலைமை தாங்கும் பிரதேச கலாமன்றத்தின் ஆதரவுடனும் காரமான, தமிழ் கலைகளைப்பயில் விக்கும் ஒரு கலாசாலையை நிறுவவேண்டும். இக்கலாசாலையின் ஆசிரியர்களாக தென் இந்தியாவிலிருந்து நல்ல முறையிற் பயிற்றக்கூடிய இருவரை அழைப்பதுசாலவும் பொருத்தமுடையது இம்முறையில் நாம் கலையை வளர்ப்போமானால் தாயகத்திற்குச் சமதையான தனில் மேதைங்கு தோன்றியது போல நாதஸ்வரமேதைகளும் தோன்றுவர்" என்று யாழ்ப்பாண இசையாளர் ஐக்கிய அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. க. க இராசா விடுத்துள்ள ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

நம்மிடையேயுள்ள பூசல்களையும் பிரிவினைகளையும் நாம் மறந்து சமூகத்தின் பொதுப் பிரச்னையில் வழிகாண செயலாற்றவேண்டும். இம்முன்னேற்றத்தை விரும்பாதவர் எமது சமூகத்தின் பொருளாதாரத்தையும் கலையையும்முன்னேற்ற வேறு சிறந்த முறைகளைத் தெரிவித்தால் அவ்வியக்கத்தில் சேர்ந்து செயலாற்ற நாம் தயாராக உள்ளோம். எனவே நம்மிற் சிலர் கூறுவதுபோன்று நாம் தாயகத்திலிருந்துவரும் கலைஞரைத் தடைசெய்யவில்லை என்றும் நம் நாட்டில் கலை வளரமுடியாமல் நாம் தடுக்கவில்லை என்பதனையும் அனைவரும் உணரவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## 12 கட்சிகள் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர்), டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா தலைமையிலுள்ள கம்யூனிஸ்ட்கட்சி, திரு. பிலிப் குணவர்த்தன தலைமையிலுள்ள எம். ஈ. பி. - ஜே. வி பி. முன்னணி, திரு. டபிள்யு. தகநாயக்காவின் தலைமையிலுள்ள லங்கா பிரஜா தந்திரக்கட்சி, திரு. ஜெபார்ட் குணவர்த்தன தலைமையிலுள்ள ஐக்கிய இடதுசாரி முன்னணி

மலைநாட்டிலுள்ள சில தொகுதிகளில் திரு எஸ. தொண்டமானை தலைவராகக் கொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் போட்டியிடுமென தெரிய வருகிறது.

சென்ற வாரம் அரசாங்கக் கட்சியிலிருந்து எதிர்க்கட்சிக்கு வந்த அங்கத்தவர்களை எதிர்த்து போட்டியிடுவதில்லையென திரு. பிலிப் குணவர்த்தன தலைமையிலுள்ள எம். ஈ. பி., ஜே. வி பி முன்னணி திரு சி. பி டி' சில்வாவிற்கு வாக்குறுதியளித்துள்ளதாக அறியப்படுகிறது. இப்படியான வாக்குறுதியை ஐக்கிய தேசிய கட்சியும் அளிக்குமென தெரியவருகிறது.

பத்திரிகை மசோதாமீது அரசாங்கத்தை ஒன்றுசேர்ந்து எதிர்ப்பதற்காக மற்றும் எதிர்க் கட்சிகளையும் எதிர்த்து ஐக்கிய தேசிய கட்சி போட்டியிடுமா என்று அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

ஒரு கட்சியில் போட்டியிடும் எல்லா அபேட்சகர்களுக்கும் ஒரே சின்னம் வழங்குவதற்கும், அக் கட்சிக்கு கீழ்க்கண்ட தகுதி இருக்கவேண்டும்.

அரசியல் நடவடிக்கைகளில் கடந்த ஐந்துவருடகாலமாக அக் கட்சி பங்குபற்றியிருப்பதென்று தேர்தல் கமிஷனருக்கு எடுத்துக்காட்டவேண்டும். அல்லது அக் கட்சி சார்பில் கடந்த பொதுத் தேர்தலில் பாராளுமன்றத் திற்கு இருவர் தெரிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும்.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு 1965-ம் ஆண்டு வாக்காளர் பதிவு இடாப்பு உபயோகிக்கப்படும். 1964-ம் ஆண்டு வாக்காளர் பதிவு இடாப்பு அடுத்தவருடம் ஜூன் மாதமே அமுலுக்கு வரும்.

1960-ம் ஆண்டு மார்ச் மாதம் நடந்த பொதுத்தேர்தலில் 23 கட்சிகள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிட முன்வந்தன. இவற்றுள் 11 கட்சிகள் மட்டுமே, பாராளுமன்றத்துக்கு தங்கள் அபேட்சகர்களை நிறுத்த அங்கீகரிக்கப்பட்டன.

## கூற்றறிக்கையை வாபஸ் பெறுக

கொழும்பு, ஞாயிறு

ஜி. சி. ஈ. பரீட்சையில் 30 சதவிகிதம் பரீட்சார்த்திகளை சித்தியடைய செய்யாத ஆசிரியர்களின் சம்பள உயர்வை நிறுத்தவேண்டுமென்ற சுற்றறிக்கையை வாபஸ் பெற வேண்டுமென்று ஆசிரியர்களின் தொழிற் சங்க கூட்டுசபை கோரியுள்ளது.

### ஜாதிக குருசங்கம் எதிர்ப்பு

மேற்படி இலாகாவின் சுற்றறிக்கைக்கு ஸ்ரீலங்கா ஜாதிய குருசங்கம் பலமாக எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

## "பிரதமரின் ராஜினமாவை கோரவேண்டும்"

கொழும்பு, ஞாயிறு

பாராளுமன்றத்தின் நம்பிக்கையை பிரதமர் ஒருமுறை இழந்து விட்டபின் நியாயமான குறைந்த நேரத்திற்குள் அவர் ராஜினமாவை சமர்ப்பிக்காவிடில், மகாதேசாதிபதி அவரின் ராஜினமாவை கோர வேண்டும்" என்று நல்லூர் எம். பி. டாக்டர் ஈ எம் வி நாகநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

## புதிய முத்திரை

கொழும்பு, ஞாயிறு

கொழும்பிற்கும் அம்பேபுசாவிற்குமிடையில் 1864-ம் ஆண்டு டிசம்பர் 27-ம் திகதி சேவைக்கு விடப்பட்ட முதல் புகையிரதத்தின் ஞாபகார்த்த முத்திரை இம்மாதம் 21-ம் திகதி வெளியிடப்படும். இப்புதிய முத்திரையின் விலை 60 சதம்.

## அரசாங்கத்தின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் துக்கத்தில் மூழ்கவைத்துள்ளது. பௌத்தத்துக்கு உரிய இடம் அளிக்கப்படும் என்றும் சிம்மாசனப்பிரசங்கத்தில் கூறப்பட்டிருந்தது கேட்டு இந்த நாட்டு மக்கள் பெருமை அடைந்தனர் இதனுடன் நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருந்த இலங்கை-இந்தியர் பிரச்னையை பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா தீர்த்துவைத்ததன் மூலம் சரித்திர புகழ் அடைந்துவிட்டார்.

கொஞ்சம் கூட பொறுப்புணர்ச்சியில்லாத சிலர் மகா சங்கத்தின் பெயரைச் சொல்லி சில பத்திரிகைகளில் அறிக்கை வெளியிடுகின்றனர். இதன் மூலம் அவர்கள் நாட்டுமக்களைத் தவறான பாதைக்குக் கொண்டுசெல்வதாக விருக்கிறது.மகாசங்கத்தின் பெயரினால் சில பிக்குகள் இப்படித் தவறாக நடக்கக்கூடாது" என்று தமது கடிதத்தில் வண. கிரிவத்துடுவ பிரக்ஞாசார நயக்க தேரோ குறிப்பிட்டுள்ளார்.

பல பௌத்த சங்கங்கள் பிரதமருக்கு இப்படியாக கடிதங்கள் எழுதியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2ம் இன்னிங்ஸ்

## இலங்கை 0—44 ரன்கள்

செல்லை, டிச 6

இந்தியாவுக்கு வந்திருக்கும் இலங்கை கிரிக்கெட் கோஷ்டிக்கும், இந்திய பல்கலைக்கழகங்களின் கிரிக்கெட்கோஷ்டிக்குமிடையே நடைபெற்றுவரும் விளையாட்டுப்போட்டியில், இன்று ஆட்ட நேர முடிவுவரை இலங்கை தன் 2ம் இன்னிங்ஸில் விக்கெட் நஷ்டமின்றி 44 ரன்கள் எடுத்தது.

இலங்கை கோஷ்டி தன் முதலாம் இன்னிங்ஸில் 165 ரன்களும், பல்கலைக்கழக கோஷ்டி முதல் இன்னிங்ஸில் 298 ரன்களும் எடுத்தன. இன்றைய ஆட்டத்தில் பல்கலைக்கழக கோஷ்டியைச் சேர்ந்த அமரநாத் 135 ரன்கள் எடுத்தது குறிப்பிடத்தக்கதாயிருந்தது.

2ம் இன்னிங்ஸில் இலங்கையைச் சேர்ந்த எட்வர்ட்ஸ் 40 ரன்களும்,. பொன்னையா 3 ரன்களும் எடுத்து அவுட் ஆகாமல் இருக்கிறார்கள்.

## குடிநீர் வசதி

உடுப்பிட்டி, ஞாயிறு

கட்டைவேலி கிராமசபை எட்லைக்குட்பட்ட 18-வது வட்டாரத்தில் வசிக்கும் சிறுபான்மைத் தமிழ் மக்களின் குடிநீர்க் கஷ்டத்தைப் போக்குவதற்காக சண்டில் குளத்திற்கருகாமையில் பொதுக் கிணறொன்றை 8,000 ரூபா செலவில் வெட்டுவதெனவும் இதற்கென அரசாங்கத்திடம் நன்கொடை கோருவதெனவும் கட்டைவேலி கிராமசபை தீர்மானித்துள்ளது.

## நீகரோ தலைவருடன் சாஸ்திரி

லண்டன், டிச. 6

சமாதான நோபல் பரிசு பெற்ற அமெரிக்க நீக்ரோ தலைவர் டாக்டர் மார்ட்டின் லூதர்கிங் இன்று லண்டனில் இந்தியப் பிரதமர் சாஸ்திரியுடன் காலை உணவு அருந்தினார். இருவரும் 50 நிமிஷம் உரையாடினர்.


## முதலாவது ஆண்டு ஞாபகார்த்தம்

வே, முத்தையா (கொன்ருக்டர்) அவர்களின் முதலாண்டு மரண ஞாபகத்தை முன்னிட்டும், அவரது ஆத்ம சாந்திக்காக மன்றாடும்பொருட்டும் இன்று ஊரணி அந்தோனியார் கோவிலில் விசேஷ பூசை நடைபெறும். தோலகட்டி மௌனசபையில் அவரது ஆத்ம சாந்திக்காக ஒரு தருமக்கிரியையும் நடைபெறும். இங்ஙனம் தந்தையை இழந்து துன்புறும் மகள் பொன்னையா அன்னம்மாவும், பேரப்பிள்ளைகள் பொன்னையா அல்பிரட், பொன்னையா வில்பிரட் தேவதாஸ், சீவரத்தினம் மேரி சிசிலியாவும். 1188

## மரண அறிவித்தல்

### இ. க. நவரத்தினம்

நடராசா, செல்வநாயகம் ஆகியோரின் அருமைச் சகோதரரும்; சபாநாதன், திருமதி ராஜேஸ்வரி மகேஸ்வரன், விஜயலட்சுமி, கமலேஸ்வரி, சிவனேஸ்வரி, இராஜகுமாரி, உதயகுமாரி ஆகியோரின் அருமைத் தகப்பனும், திரு, மகேஸ்வரனின் (போஸ்ட்மாஸ்டர் காரைநகர்) மாமனாரும் ஆகிய தாவடியைச் சேர்ந்த இ க நவரத்தினம் பிரபல சுருட்டு வியாபாரி சிவபதம் அடைந்தார். அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 3 மணிக்கு தாவடி மயானத்தில் இறுதிச் சடங்குகளுக்காக எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் இதனை ஏற்றுக் கொள்ளவும். 1188


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட்டுக்காக [illegible] யாழ்ப்பாணம் [illegible] சிவன்கோவில் மெயின்வீதி 63-ம் இலக்கத்தில் [illegible] அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.